**நாள்: 12.03.2026**
**O.S. No. 83/2018**

**பி.சா.4**
**பெயர்: சந்துரு, த/பெ. கோவிந்தசாமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் சரிதான். தாவா புலஎண் தெரியுமா என்றால் தெரியும். புலஎண்.134/B1 ஆகும். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாதி சேகர் இடத்தை கேட்டு வழக்கு போட்டுள்ளார். வாதி வழக்கு குறித்து எனக்கு எப்படி தெரியும் என்றால் 2ம் பிரதிவாதி மணிசங்கர் சொல்லி தெரியும். தாவா சொத்தின் அடிமனை யாருக்கு சொந்தம் என்றால் ராஜன் கட்டளைக்கு சொந்தமாகும். என் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து 2 பாகமாக உள்ளது என்றால் சரிதான். என் அப்பாவுக்கும் என் சித்தப்பாவுக்கும் உள்ளது. (சாட்சி பின்னிட்டு ஒரே போஷனாக உள்ளது என்று கூறினார்). என் தந்தையாரும் வாதியின் தந்தையாரும் குடியிருந்துவந்த வீட்டை 2 சம பாகமாக பிரித்துகொண்டார் என முதல் விசாரணையில் சொல்லியுள்ள சொத்து இந்த வழக்கு சொத்துதான் என்றால் சரிதான். நாங்கள் வசித்துவந்த பகுதிக்கும் சித்தப்பா வசித்துவந்த பகுதிக்கும் இடையே சுற்றுசுவர் எழுப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கான அடிமனை பகுதி செலுத்தப்பட்டதற்கு ரசீதுகள் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

தாவா சொத்தில் ஒருபகுதி எனக்கு சொந்தமானது என கூறுகிறேனா என்றால் இல்லை. பூராவும் 2ம் பிரதிவாதி மணிசங்கருக்கு சொந்தமானதாகும். தாவா சொத்திற்கு அடிமனை பகுதி என் தந்தையாரால் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். பிறகு என் சித்தப்பா மாசிலாமணி செலுத்தி வந்தார். தாவா சொத்தில் எனக்கு உள்ள உரிமையை நான் யாருக்கு விட்டுக்கொடுத்துள்ளேன் என்றால் என் அண்ணன் மகன் கருணாநிதிக்கு என் அப்பா விட்டுக்கொடுத்துள்ளார். அவ்வாறு விட்டுக்கொடுத்ததுக்கு பதிவு ஆவணம் ஏற்படுத்தியுள்ளேனா என்றால் அனுபவ இடம் என்பதால் பதிவு ஆவணம் ஏற்படுத்திகொள்ளவில்லை. மேற்படி அண்ணன் மகன் கருணாநிதிக்கு பாகம் விட்டுக்கொடுத்தது குறித்து முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மாசிலாமணி விட்டுக்கொடுத்தது என்பது அவருடைய அனுபவ இடத்தை என்றால் சரிதான். மாசிலாமணி மகன் பெயர் கருணாநிதி.

நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் விவசாயம் பார்த்துவருகிறேன். ஆரம்பத்தில் 1980 களில் நான் வெளிநாடு சென்றேன். சென்னையில் வேலை பார்த்துள்ளேனா என்றால் வேலை பார்த்துள்ளேன். மேற்படி சென்னையில் நான் வேலை பார்த்த இடத்தில் என்னுடன் என் குடும்ப உறுப்பினர்கள் வேறு யாரும் வேலை பார்த்தார்களா என்றால் 1ம் பிரதிவாதி பாலு, வாதி சேகர் ஆகியோரும் என்னுடன் வேலை பார்த்தார்கள். ஆரம்பம் முதலே வாதி சேகருக்கும் எனக்கும் நல்ல உறவு இல்லை என்றால் சரியல்ல.

என் வீட்டிற்கு எதிராக உள்ள ருத்ர காளியம்மன் கோவிலில் நான் என்ன பொறுப்பிலிருந்தேன் என்றால் தலைவராக இருந்தேன். என்

மனைவி பெயர் என்ன என்றால் மல்லிகா. நான் தலைவராக இருந்த காலகட்டத்தில் கோவிலில் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. தற்போதும் நான் தலைவராக உள்ளேன். நானோ எனது மனைவியோ வாதியிடம் எந்த காலகத்திலாவது கடன் வாங்கி அதற்காக பிராமிசரி நோட்டு எழுதிகொடுத்துள்ளோமா என்றால் நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் பிராமிசரிநோட்டில் உள்ள நகலில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். கடந்த 12.09.2011 தேதியில் இந்த வாதியிடம் நானும் என் மனைவியும் சேர்ந்து கோவிலில் ஏற்பட்ட பிரச்சனைக்காக ரூ.3/–லட்சம் தொகை பெற்றுகொண்டோம் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய கடனை தீர்த்துவிட்டேனா என்றால் தீர்த்துவிட்டேன். மேற்படி கடன் தீர்த்துவிட்டதால் அசல் பிராமிசரிநோட் என்வசம் உள்ளதா என்றால் எங்கு உள்ளது என்று தெரியவில்லை. நான் கூறுவது போல் வாதியிடம் வாங்கிய கடனை நான் தீர்க்கவில்லை என்றாலும் அதன் காரணமாகவே அசல் என்னிடம் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி கடனை திரும்ப கேட்ட காரணத்தாலேயே வாதிக்கும் எனக்கும் முன்விரோம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கடன் உண்மையிலேயே தீர்க்கப்பட்டிருந்தால் அசல் பிராமிசரி நோட் என்வசம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி பாலு வெளிநாட்டிலிருந்து எனக்கு பணம் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். பாலு மற்றவர்களுக்கு பணம் அனுப்பியது தொடர்பாகவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பஞ்சாயத்து வரிரசீதுகள் எதுவும் நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த ஆண்டுக்குரிய வரிரசீதை பார்த்துள்ளேன் என்றால் வீட்டிற்கு போய் பார்த்தால்தான் தெரியும்.

எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1986 ல் திருமணம் ஆனது. தேதி, மாதம் என்ன என்றால் நினைவில்லை. என் சித்தப்பாவீட்டில் வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என் சித்தப்பா சொல்லி தெரியும். வாதி சேகருக்கு எப்போது திருமணம் நடைபெற்ற என்றால் எனக்கு முன்பு நடைபெற்றது. எந்த ஆண்டு என்று தெரியாது. மாதா கோவில் தெருவில் எந்த புலஎண்ணில் யார் சொத்து வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் புலஎண் தெரியாது. பாலு வாங்கினார் என்று தெரியும். பாலு வாங்கியது தொடர்பாக ஆவணங்கள் எதையும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி சேகர் வீடு விற்றது தொடர்பாக ஆவணங்கள் நான் பாத்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் மகன் எங்கள் சமூதாயத்தை சேராத பெண்ணை திருமணம் செய்துகொண்டாரா என்றால் கேள்விபட்டுள்ளேன்.

என் முதல்விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் வாதி மகன் திருமணம் குறித்து நான் எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் கேள்விபட்ட வகையில் கூறியுள்ளேன். நான் கூறுவதுபோல எனக்கு வாதியின் மகன் திருமணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் தற்போது சாட்சியம் அளிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக கேள்விபட்டதாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

எந்த கதவிலக்கத்திற்கு வரிரசீது வாங்கபட்டதாக முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் 2/82 க்கு வரிரசீது வாங்கியது குறித்து சொல்லியுள்ளேன். புதுக்கோட்டையில் சேகர் வசித்துவருவது தொடர்பாக நான் கேள்விபட்ட வகையில்தான் கூறுகிறேன் என்றால் சரிதான். வாதி மின்சார வாரியத்தில் மின் இணைப்பிற்கு பெயர் மாற்றியது தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எலக்ட்ரிகல் பேபிரிகேஷன் நடத்தி வந்ததில் நான் பங்கு தாரர் இல்லை என்றால் சரிதான். மாசிலாமணி குடும்பத்திற்கு நஞ்சை நிலங்கள் வேறு உள்ளதா என்றால் அவருக்கென்று தனியாக இல்லை. அவர் மகன்கள் வாங்கியுள்ளார்கள். வாதிக்கும் எனக்கும் உள்ள பிராமிசரி நோட்டின் பேரின் உள்ள முன்விரோத்தின் காரணமாக 2ம் பிரதிவாதி கேட்டுகொண்டாதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.12 18:34:38 +0530